# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2024 ஆம் ஆண்டு ஜீலை திங்கள் கிழமை 01ம் நாள் சாட்சியாகிய சரத்குமார் என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10வது சட்ட விதியின்படி திரு.விஜிகுமார், ஜெராக்ஸ் ஆப்ரேட்டர் என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சரத்குமார் | வயது | 31 |
| த/பெ. | செல்வம் | இனம் | ஆண் |
| கிராமம் | வடமாமபாக்கம் | தொழில் | வெல்டிங் கடை வைத்துள்ளேன் |
| சமயம் | | தாலூக்கா | |

**C.C. 61/2020**

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை)

<u>முதல் விசாரணை 01.07.2024 அ.சா.6</u>

1. நான் தற்போது வடமாம்பாக்கத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். எனது ஊருக்கு பக்கத்து ஊரை சேர்ந்தவர். தேதி ஞாபகம் இல்லை. 2019 வருடம் நவம்பர் மாதம் மாலை 4.00 மணியில் இருந்தது 5 மணிக்குள் மாங்கம்மாபேட்டையில் உள்ள எம் ஆர் எப் கோர்ட்ரஸ் எதிரில் எதிரியும், மற்றொரு நபரும் சண்டை போட்டுகொண்டு இருந்தார்கள்.

2. நான் சண்டை தடுத்தபோது அந்த மற்றொரு நபருக்கு தலையில் இருந்து இரத்தம் வந்தது. எதிரியும், அந்த பெயர் தெரியாத நபரும் கையால் குத்திக் கொண்டார்கள். நான் அந்த பெயர் தெரியாத நபரை மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தேன். அந்த சண்டை நடந்த இடத்திற்கு பக்கத்தில் தான் அந்த எனது வெல்டிங் கடை உள்ளது. மறுநாள் போலீசார் வந்து விசாரித்தனர். எதிரிக்கு காயம் ஏதுவும் ஏற்படவில்லை.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

3. எதிரி ஆஜராகி குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்துக் கொள்ளப்பட்டது.

மறு விசாரணை; இல்லை.

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.

Judicial Magistrate No.I
Arakkonam.